## வாக்குரிமை பறிப்பின் புதிய சூத்திரம்

# பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கும் மிகப் பெரும் மோசடி!

PEOPLE'S DEMOCRACY
தலையங்கம்

தலைமைத் தேர்தல் ஆணையத்தின் சமீபத்திய விளம்பரத் தாக்குதல்கள், பாசாங்குத்தனம் என்றால் என்ன என்பதற்கு ஒரு சரியான உதாரணமாகும். வரவிருக்கும் பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்களின் 'சிறப்பு தீவிர திருத்தம்' (Special Intensive Revision) தொடர்பான விளம்பரத்தின் வாசகங்கள், அனைத்து அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவு என்று கூறு கிறது. இதுவரையிலும் அப்படித்தான் நடந்து வந்திருக்கிறது. இன்றுவரையில் நாட்டில் எந்தவொரு தேர்தல் சீர்திருத்தம் என்றாலும், அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசித்த பின்னர்தான் தேர்தல் ஆணையம் அவற்றை அமல் படுத்தியிருக்கிறது. அதே போன்று தேர்தல் நடத்தை விதி (MCCModel Code of Conduct)யும் அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன்தான் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. தேர்தல் நடத்தை விதிக்கு சட்டபூர்வமான கட்டுப்பாடு இல்லை என்ற போதிலும், அது இன்றுவரை செயல்பட்ட விதம், அவ்வப்போது ஏற்படும் சவால்களை அது சரியாகவே தீர்த்து வைத்திருக்கிறது.

**முற்றிலும் முரணான விதத்தில்...**

இதற்கு முற்றிலும் முரணான விதத்தில், அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்துடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும், அவற்றிற்கு எதையும் தெரிவிக்காமல், அவற்றிற்கு ஒரு சிறிய குறிப்பு கூட பகிராமல், பீகாரில் 'சிறப்பு தீவிர திருத்தம்' கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவ்வாறாக தேர்தல் ஆணையம், தான் என்ன செய்ய இருக்கிறது என்பதை அரசியல் கட்சிகளிடம் சொல்வதிலிருந்து வெகுதூரம் விலகிச்சென்றுவிட்டது. எனினும், பீகாரில் 'சிறப்பு தீவிர திருத்தம்' (SIR) ஆரம்பித்திருக்கும் விதமே, இதன் இரட்டை முகத்தன்மையை வெளிப்படுத்திவிட்டது. இது மிகப் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. உண் மையில் இது திருத்தமே கிடையாது. மாறாக, புதிதாகவே தேர்தல் வாக்காளர் பட்டியலை தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். சுதந்திர இந்தியாவில் ஜனநாயகத்தை நிறுவுவதற்கான அடிப்படை அணுகுமுறை, வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாதிரியில் நங்கூரமிடப்பட்டது. முதல் தேர்தல் ஆணையர் இரண்டு அடிப்படை அளவுகோல்கள் மூலம் இதை நடைமுறைப்படுத்தினார்: வாக்களிக்கும் உரிமை அனைவருக்குமானதாக இருக்க வேண்டும்; வாக்காளர் பட்டியலை உருவாக்கும் பொறுப்பு தனிப்பட்ட வாக்காளரிடம் அல்ல, மாறாக தேர்தல் ஆணை யத்திடம் உள்ளது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையை அடைவதற்கான வழிகாட்டுதலை வழங்கிய 326 ஆவது பிரிவு, அதை வெளிப்படையாகவே கூறியது.

**அரசமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் மீறல்!**

குடியுரிமையை நிரூபிக்கும் பொறுப்பு ஒருபோதும் வாக்காளர் மீது திணிக்கப்பட்டதில்லை. 326ஆவது பிரிவின் முழுமையான ஆய்வு, அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை என்ற தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது, குடியுரிமைக்கு அல்ல என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். இது அவ்வப்போது புதுப்பிப்பதை உறுதி செய்கிறது. தேர்தல் ஆணையம் புனிதமானது என்று ஏற்றுக்கொள்ளும் 2003 திருத்தத்தில் கூட, குடியுரிமைச் சான்று வாக்காளர்களிடமிருந்து வெளிப்படையாகக் கோரப்படவில்லை. தேர்தல் ஆணையம் இதுவரை வெளியிட்டுள்ள அறிக்கைகள் இந்த உண்மையை நிறுவுகின்றன. ஆனால் இப்போது கொண்டு வரப்பட்டுள்ள 'சிறப்பு தீவிர திருத்தம்', இதுவரை பின்பற்றப்பட்டு வந்த அடிப்படைக் கொள்கைக்கு மாறாக, வாக்காளர் கள் மீது குடியுரிமையை நிரூபிக்கும் பொறுப்பை சுமத்தியிருக்கிறது.

**அதிர்ச்சியூட்டும் புள்ளிவிவரங்கள்!**

ஜூலை 27ஆம் தேதி வெளியிடப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பின்படி, மொத்தம் 7 கோடியே 24 லட்சம் கணக்கெடுப்பு படி வங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 'சிறப்பு தீவிர திருத்தம்' தொடங்கப்பட்ட நாளான 2025 ஜூன் 24 அன்று மாநில வாக்காளர் பட்டியலில் இருந்த 7 கோடியே 89 லட்சம் பெயர்களுடன் ஒப்பிடும் போது, இந்தப் பெயர்கள் மட்டுமே வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். மீதமுள்ளவர்கள் சுமார் 65 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற மாட்டார்கள் என்று கூறியிருக்கிறது. இவர்களில் 22 லட்சம் பேர் இறந்துவிட்டனர், 36 லட்சம் பேர் கண்டுபிடிக்க முடியாதவர்கள், 7 லட்சம் பேர் பல இடங்களில் பதிவு செய்திருக்கின்றனர் அல்லது ஏதேனும் ஒரு காரணத்திற்காக வாக்காளராகப் பதிவு செய்யத் தயாராயில்லை என்று தேர்தல் ஆணையம் கூறுகிறது.

**அசாதாரணமான வாக்காளர் எண்ணிக்கை வீழ்ச்சி!**

இந்த எண்ணிக்கை மிகவும் கவலைய ளிக்கிறது. 2020 சட்டமன்றத் தேர்தலில் 7 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் இருந்திருக்கிறார்கள். இப்போது 2025 ஆம் ஆண்டில் பீகாரின் வாக்காளர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிடும். கடந்த கால பதிவுகளைப் பார்க்கும்போது, இது மிகவும் அசாதாரணமானது. இது பல கேள்விகளை எழுப்புகிறது. ஒரு நபர் ஒரு மாநிலத்திலிருந்து 'நிரந்தரமாக இடம் பெயர்ந்துவிட்டார்' என்ற முடிவுக்கு வருவ தற்கு முன்பு, ஒவ்வொரு வழக்கிலும் முழு மையான விசாரணை நடத்தப்பட வேண்டாமா? 37 லட்சம் பேர் சம்பந்தப்பட்ட அத்தகைய விசாரணையை 30 நாட்களில் எவ்வாறு நடத்த முடியும்? பீகாரில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே நடத்தப்பட்ட ஒரு ஆய்வு, அவர்களில் 90 சதவீதம் பேர் படிவங்களைச் சமர்ப்பிப்பதைப் பற்றிக் கூட அறிந்திருக்கவில்லை என்பதையும், அவர்களுக்கு 'சிறப்பு தீவிர திருத்தம்' குறித்து எதுவுமே தெரியாது என்பதையும் காட்டுகிறது. 2025 ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட சுருக்கத் திருத்தத்தின்போது இறந்தவர் குறித்து இந்த அளவிற்குக் குறிப்பி டப்படவில்லை. வாக்காளர் பட்டியல், சட்ட மன்றத் தொகுதி வாரியாக வெளியிடப்பட்ட வுடன், இப்போதுள்ள வடிவங்களில் பரந்த அளவிற்கு வேறுபாடுகள் இருப்பது தெளிவாகும்.

**வாக்காளர் - மக்கள்தொகை விகித ஆய்வு!**

பீகாரில் வாக்காளர் பட்டியலின் ஒப்பீட்டுத் தரத்தை மதிப்பிடுவதற்காக, நன்கு அறியப்பட்ட தேர்தல் கணிப்பியல் ஆய்வாளரான யோகேந்திர யாதவ், வாக்காளர்மக்கள்தொகை விகிதத்தை உருவாக்கியுள்ளார். ஜூலை மாத தொடக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களின் குழுவிடம், பீகார் பட்டியலில் உள்ள 20 சதவீத பெயர்கள் போலியா னவை என்றும் அவற்றைக் குறைக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியதைத் தொடர்ந்து இது அவசிய மானது. எனினும் இவருடைய செயல்முறை முடிவதற்கு முன்பே தேர்தல் ஆணையம் முடிவுக்கு வந்திருப்பது, அந்த முடிவு முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாகவும், அகநிலை சார்ந்ததாகவும் தெரி கிறது. தேசிய மக்கள்தொகை ஆணையம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட மக்கள்தொகை கணிப்புகள் குறித்த தொழில்நுட்பக் குழு வின் அறிக்கையில் (2019) உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான கணிப்புகள் (மாநில வாரியாக, ஆண்டு வாரியாக, வயது வாரியாக) மக்கள் தொகை தரவுகளுக்கான சிறந்த ஆதாரங்க ளாகும். இந்த புள்ளிவிவரங்கள் இந்திய அரசாங்கத்தாலும், தேர்தல் ஆணையத்தாலும் 2025 ஜனவரியில் பயன்படுத்தப் பட்டன. மாநில வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை தொடர்புடைய வயதினரால் வகுத்தால் வாக்காளர் விகிதம் கிடைக்கும். 100 சதவீத மதிப்பெண் என்பது சரியான பொருத்தத்திற்கான சிறந்த சூழ்நிலையைக் குறிக்கிறது. 2024ஆம் ஆண்டில், அகில இந்திய வாக்காளர் மக்கள் தொகை விகிதம் 99 சதவீதமாக இருந்தது, இது வெறும் 1 சதவீத பற்றாக்குறையைக் குறிக்கிறது. பீகாரில் வாக்காளர்மக்கள் தொகை விகிதம் 97 சதவீதம் ஆகும். இது தேசிய சராசரியை விட சற்று குறைவு. இதனால், அதன் வாக்காளர் பட்டியல் உயர்த்தப்படவில்லை, மாறாக சற்று குறைக்கப்பட்டது.

**முன்னறிவிப்பு இல்லாத அதிர்ச்சி!**

ஜூன் 24 அன்று, 'சிறப்பு தீவிர திருத்தம்' அறிவிக்கப்பட்ட நாளில், பீகாரில் வாக்காளர்மக்கள்தொகை விகிதம் 97 சதவீதமாக இருந்தது. 'சிறப்பு தீவிர திருத்தம்' தொடர்பான செயல்முறை குறித்த தேர்தல் ஆணையத்தின் அதிகா ரப்பூர்வ அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டபடி, வாக்காளர் பட்டியலை இதற்கு மேலும் வெட்டிச் சுருக்கவில்லை என்றாலும் கூட, கடந்த ஐந்து தேர்தல்களுடன் ஒப்பிடும்போது பீகாரில் இதுவே ஒரு திடீர் மற்றும் கூர்மையான வீழ்ச்சியா கும். மேலும், இது மற்ற அனைத்து மாநிலங்களையும் விட கணிசமாகக் குறைவாக இருக்கும்.

**இலக்கு மாற்றல் மற்றும் ஏமாற்று வித்தைகள்!**

கணக்கெடுப்பை முடிப்பதற்கு முன்பு, விண்ணப்பத்தை நகலாக சமர்ப்பித்து, 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்ற தேவையை தள்ளுபடி செய்ததன் மூலம், தேர்தல் ஆணையம் தனது இலக்கை பாதியிலேயே மாற்றியது. இருப்பினும், தேவைப்பட்டால், விண்ணப்பப் படிவங்களின் நகல்களையும், நீக்குதலுக்கான விளக்கத்தையும் தேர்தல் ஆணையம் வழங்குமா என்பது தெரியவில்லை.

**ஊடக வெளிப்பாடுகள்!**

இதுவரை இந்த செயல்முறை மிகவும் மோசமான முறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளதை ஊடகங்கள் விரிவாகவே வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருக் கின்றன. தேர்தல் ஆணையம் புதிதாக எவரையும் சேர்த்திடவில்லை. இது அபத்தமானது. வெளிப்படையாக இது 'மிகப் பெரிய அளவில் வாக்காளர்களை நீக்கும்' (mass exclusion) நடவடிக்கையாகும். உச்சநீதிமன்றம் வலியுறுத்திய படி 'மிகப்பெரிய அளவில் வாக்காளர்களை சேர்க்கும்' ('mass inclusion') நட வடிக்கை அல்ல.

**வாக்குரிமைப் போராட்டத்தின் தொடக்கம்!**

எனவே, பீகாரில் அரசமைப்புச்சட்ட உரிமையான 'வாக்களிக்கும் உரிமையை' ('right to vote') பாதுகாப்பதற்கான போ ராட்டம் தீவிரமடைந்துள்ளது. நாட்டின் இதர பகுதிகளுக்கும், 'சிறப்பு தீவிர திருத்தத்தை' தேர்தல் ஆணையம் வலியுறுத்துமானால், இதற்கெதிராக நாடு தழுவிய அளவில் போராட்டம் வெடித்திடும்.

நன்றி :
**'தீக்கதிர்'**
10.08.2025

## தமிழ்நாட்டிலும் தேசிய அளவிலும்

# "மேக் இன் இந்தியா" திட்டங்களால் உருவான வேலைவாய்ப்புகள் எவ்வளவு?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11 -

தமிழ் நாட்டிலும் தேசிய அளவிலும் மேக் இன் இந்தியா திட்டங்களால் உருவான வேலை வாய்ப்புகள் தொடர்பாக மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்வி வருமாறு:

தமிழ்நாட்டில் மேக் இன் இந்தியா முன்முயற்சி தொடங்கப்பட்டதிலிருந்து அதன் கீழ் தொடங்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?திட்டத்தின் பெயர் இருப்பிடம், துறை முதலீட்டுத் தொகை மற்றும் முடிக்கப்பட்ட மற்றும் நடந்து கொண்டிருக்கும் திட்டங்களின் நிலை உள்ளிட்ட அத்தகைய திட்டங்களின் விவரங்கள்தருக ? மேக் இன்இந்தியாதிட்டத்தின் கீழ் தேசிய அளவிலும் தமிழ்நாட்டிலும் குறிப்பாக இலக்கு வைக்கப்பட்ட முக்கிய துறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட துறை வாரியான முதலீட்டு முன்மொழிவுகளின் விவரம் மற்றும் ஒவ்வொரு துறையிலும் நிறுவப்பட்ட

தொழில்துறை அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

அதிக முன்னுரிமை கொண்ட துறைகளில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க

அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இந்த முயற்சி தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ் நாட்டிலும் தேசிய அளவிலும் மேக் இன் இந்தியா தொடர்பான திட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்ட மொத்த வேலை வாய்ப்பு: எத்தனை? வரும் ஆண்டுகளில் மேக் இன்இந்தியா முயற்சியின் நோக்கத்தை விரிவுபடுத்த அரசாங்கம் முன்மொழிகிறதா. அப்படி யானால் அதன் விவரங்கள் மற்றும் விரிவா க்கத்திற்காக அடையாளம் காணப்பட்ட புதிய துறைகள் அல்லது புவியியன் பகுதிகள் என்ன?

இவ்வாறு கேள்வி கேட்டிருந்தார். அதற்கு ஒன்றிய வணிகர் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

# ராகுல் காந்தி தலைமையில் "இந்தியா" கூட்டணி கட்சிகள் இன்று பேரணி!

## தலைமை தேர்தல் ஆணையரை நேரில் சந்தித்து மனு அளிக்க திட்டம்!

**புதுடெல்லி, ஆக. 11 -**

**இதனிடையே, வாக்காளர் பட்டியல் முறைகேடு, பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகியவற்றை கண்டித்து டெல்லியில் இந்தியா கூட்டணி கட்சிகள், இன்று பேரணி நடத்த உள்ளனர்.**

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி தலைமையில் தேர்தல் ஆணையம் நோக்கி நாளை பேரணியாக செல்லும், இந்தியா கூட்டணி கட்சிகள், தலைமை தேர்தல் ஆணையரை சந்தித்து மனு அளிக்க திட்டமிட்டுள் ளனர். இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து இந்த பேரணி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ராகுல் காந்தி மீண்டும் வலியுறத்தல்!**

அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், வாக்கு திருட்டு என்பது ஒரு நபர், ஒரு வாக்கு என்ற அடிப்படை ஜனநாயக கொள்கையின் மீதான தாக்குதல் என்று கூறியுள்ளார். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு நேர்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார். அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் தெரிந்து கொள்ளும் வகையில், டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை என்று ராகுல்காந்தி கூறியுள்ளார்.

இதன்மூலம், பொதுமக்களும், அரசியல் கட்சிகளும் தாங்களாகவே ஆய்வு செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், http://votechori.in/ecdemand இணையதளம் அல்லது 9650003420 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுக்குமாறும் கூறியுள்ளார்.

இந்த போராட்டம் ஜனநாயகத்தை காப்பதற்கான போராட்டம் என்றும் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணை செயலாளரும், திருவள்ளூர் நகர்மன்ற தலைவருமான உதய மலர் பாண்டியன் ஏற்பாட்டில் மீரா திரையரங்கம் அருகில் ஏழை எளியோருக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர் மன்ற துணைத் தலைவரும், நகர செயலாளருமான சி. சு. ரவிச்சந்திரன், நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், நகர நிர்வாகிகள் ஆ. கமலகண்ணன், ராஜேஸ்வரிகைலாசம், டி.என். ஆர். சீனிவாசன், காஞ்சிப்பாடி பி. சரவணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.நேதாஜி, ஜி.வேலாயுதம், டி.கே.பாபு, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் த.அயூப்அலி, பா.ராஜி, என்.பாலகிருஷ்ணன், கு.பிரபாகரன், நகர்மன்ற உறுப்பினர் வி.இ.ஜான், பி.கருணாகரன், என்.சிவகுமார், தகவல் தொழில்நுட்ப அணி என்.சுரேஷ்குமார், சுனில், ஜெ.கார்த்திக்குமார், வி.பரத்குமார், உள்ளிட்ட கழகத் தோழர்கள், ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### நெல்லை மாநகர கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

நெல்லை, ஆக. 11 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்திற்கு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பகுதி பொறுப்பாளர் நமச்சி வாயம்,அலிஃப் மீரான்,கேபிள் குமரேசன், மைக் மணி,அந்தோணி ராஜ், வினோத் குமார்,பல்க் சங்கர் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி, எட்டாவது வட்டத்தின் சார்பாக நடைபெற உள்ள இல்லம்தேடி அரசு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலமாக பொதுமக்கள் பயன்பெற 14-08-2025 அன்று காலை 9 மணி அளவில் பெரியார் நகரில் நடைபெறும் பயனாளிகள் முகாமிற்கு இல்லம் தோறும் சென்று மக்களுக்கு திட்டத்தின் உபயோகம் குறித்து விளக்கியும், முகாமில் கலந்துகொண்டு பயன் பெறவும் அரசு அதிகாரிகளுடன் இணைந்து மக்களை நேரில் சந்தித்து தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டன. இதில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் டி.சி.ராஜகுமாரி விஜயன், எட்டாவது வட்டக் கழக செயலாளர் டி.சி.வி. மணிகண்டன், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் டி.டி.எம்.பாபு, ஒய். நந்திவர்மன், எ.அருளானந்தம், சுப்பிரமணியன், கணேசன், அரங்கநாதன், எம்.எஸ். பாண்டியன்சின்ன பாப்பா, அபூபக்கர் சித்திக், மூர்த்தி, செந்தில் வேலன், சுகந்தா முனுசாமி, தினேஷ் வேலன், கண்ணன், ஹரி, ஸ்ரீதரன், பாக முகவர்கள் ஜெகன், ஆனந்த், வெங்கடேஸ்வரன், சசிகுமார், எம்.சிவகுமார், க.சிவகுமார், மகேஷ் குமார் மற்றும் வருவாய் துறை அதிகாரி பொன்னுரங்கம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.